**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் புதன்கிழமை**

**O.S.48/2022**

வா.சா.1

ஆனந்தகிருஷ்ணன், த/பெ. ஜெயராமன்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் வழக்குரையில் தாவா சொத்தில் 5 அடி பாதை புழக்கத்தை பிரதிவாதி தடுக்க கூடாது என்பதற்கு தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்கு பிரதிவாதிக்கு எதிராக 5 அடி பாதை புழக்கத்திற்கு மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், வேறு இதர கூடுதல் சதுரடிகள் பொறுத்து பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை என்றாலும் சரிதான்.

2. வழக்குரை சொத்து விவரத்தில் கண்டுள்ள நகர புல எண்.1247, புதிய புல எண்.1247/4-ல் 8826 சதுரடி மட்டும் தான் என் தாயாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய 5 அடி சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்ட 8826 சதுரடி சொத்தில் அடங்கியது அல்ல என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய 5 அடி பாதைக்கு அகலம் எவ்வளவு என்றால் 100 அடிக்கு மேல் இருக்கும். மேற்படி பிரச்சினைக்குரிய சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 1000 சதுரடியிருக்கும்.

3. மேற்படி, 5 அடி அகல பாதையோ அல்லது அதன் கூடுதல் விஸ்தீரணமாக நான் கூறும் 1000 சதுரடியோ எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான

ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்குரையில் மேற்படி, 5 அடி அகல பாதை என் தாயாருக்கு சொந்தம் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும், மேற்படி சொத்தின் பேரில் வாதிகளாகிய எங்களுக்கு உரிமை இல்லாததாலும், அதை பொறுத்து பரிகாரம் கோர எனக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல.

4. மேற்படி 5 அகலம் சுமார் 100 அடி நீளமுள்ள பாதையை யார், யார் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் மீனாட்சி, விஜயகுமார், வசந்தா மற்றும் ரஹமத்நிஷா ஆகியோர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். என்னுடைய அத்தை இந்திரா மற்றும் அவரது மகனான பிரதிவாதி செந்தில்குமார் ஆகியோர்களுக்கு மேற்படி பாதை புழக்க உரிமையுண்டா என்றால் இல்லை. பிரதிவாதியின் சகோதரியை நான் திருமணம் செய்து இப்பால் இருவருக்கும் இடையே விவகாரத்து தொடர்பாக வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி விவகாரத்து முன்விரோதம் காரணமாக இந்த வழக்கை உண்மைக்கு மாறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி 5 அடி பாதைக்கு வடபுறம் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை தான் பிரதிவாதி பயன்படுத்தி வருகிறார் என்றால் இல்லை. அவர் தெருவோரம் உள்ள பாதையை பயன்படுத்தி வருகிறார். பிரதிவாதி மேற்படி 5 அடி அகல பாதையைதான் பயன்படுத்தி வருகிறார் என்றாலும், நான் உண்மைக்க மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 5 அடி அகல பொதுப்பாதையில் நகராட்சிக்கு சொந்தமான தெருவிளக்கு

பயன்பாட்டில் உள்ளது என்றாலும், பாதாள சாக்கடை பயன்பாட்டில் உள்ளது என்றாலும், குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், நகராட்சி ஊழியர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றாலும் சரிதான்.

6. மேற்படி 5 அடி அகல பாதை பொது சாலை என்பதால் அதனை இந்த பிரதிவாதி பயன்படுத்துவதை தடுக்க எவ்வித உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதையை பயன்படுத்திவரும் நபர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு உரிமையில்லாத சொத்தின் பேரில் பேரிலும், பொது பாதையை அபகரிக்கும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வசதிரிமை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்க வேண்டுமேமொழிய உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. சொத்தின் பேரில் உரிமையில்லாத நிலையில், விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு என் தாயாரால் தாக்கல் செய்யப்பட்டு அவர் இறப்பிற்கு பிறகு வாரிசுகள் சார்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள இவ்வழக்கில் என் தாயார் இறப்பிற்கு பிறகு வழக்குமூலம் அற்றுபோய்விட்ட காரணத்தினால் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.06.18 18:25:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.